(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 115.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 டிசெம்பர் 03, புதன்கிழமை மு.ப. 9.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

---

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ சதுர கலப்பத்தி**

**கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ நலீன் பண்டார ஜயமஹ**

**கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன**

**கௌரவ திலித் ஜயவீர**

**கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர**

**கௌரவ எம். ஏ. எம். தாஹிர்**

**கௌரவ சுகத் வசந்த த சில்வா**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**

**கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க**

**கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த**

**கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன**

**கௌரவ கிங்ஸ் நெல்சன்**

**கௌரவ நந்தன பத்மகுமார**

**கௌரவ அருண பனாகொட**

**கௌரவ அஜித் பி. பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க**

**கௌரவ ருவன் மாபலகம**

**கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்**

**கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார் :—

"கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் முத்து மொஹம்மட் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கும் கடிதத்தை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு கையளித்துள்ளார் என்பதனையும், அதற்கேற்ப பத்தாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்பதனையும் பாராளுமன்றத்திற்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அக்கடிதம் தற்பொழுது பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களால் வாசிக்கப்படும்."

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

**The Secretary General of Parliament**
**Parliament of Sri Lanka**
**Sri Jayewardenepura Kotte**

Dear Secretary General,

**<u>Resignation from the Position of Member of Parliament</u>**

I hereby tender my resignation as a Member of Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka, appointed through the National List of the Samagi Jana Balawegaya (SJB), with immediate effect.

I wish to place on record my sincere gratitude to the Hon. Speaker, the Secretary General, the staff of Parliament, and my fellow Members of Parliament for the support extended to me during my tenure.

Kindly take the necessary steps to formalize this resignation lawfully..

Thank you.
Yours faithfully,

**Ismail Mutthu Mohamed,**
**Member of Parliament**

Cc: **Chairman, Elections Commission of Sri Lanka**
**General Secretary, Samagi Jana Balawegaya**
**Secretary General, All Ceylon Makkal Congress**

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2024 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXXI மற்றும் XXXII ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் XXI ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XVIII மற்றும் XIX ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி ஆவணம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பத்தாவது தொகுதியின் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் (NIBM) துணை கம்பனியொன்றாக காணப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனத்தினை (NSBM) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாற்றும் செயல்முறையின் முறையற்றதன்மை மற்றும் அதன் தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையினைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ், பெறுமதி சேர் வரி மீளளிப்பு நிதியத்தை முகாமைத்துவம் செய்வது தொடர்பில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 31 ஆம் திகதிய 2460/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025 நவெம்பர் 28 ஆம் திகதிய 2464/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனம்; மற்றும்

(ii) 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2025.10.01 முதல் 2025.10.31 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் அபிவிருத்திச் செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ் ஆவணம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

(5) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், 2023/2024 ஆம் ஆண்டுக்கான களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் பற்றிய விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) மக்கள் வரவுசெலவுத் திட்டம் – தேசிய வரவுசெலவுத் திட்டம் 2026;

(ii) அமைச்சுவாரியான பிரதான செலவினக் கூறுகள் - வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் 2026;

(iii) வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை – 2026;

(iv) மத்திய ஆண்டு நிதிநிலை அறிக்கை - 2025;

(v) வரிச் செலவினங்கள் பற்றிய கூற்று -2024/2025;

(vi) நடுத்தரக் கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2026-2030 மற்றும் வருடாந்த கடன் பெறுகைத் திட்டம் -2026;

(vii) பிரதான பொது முதலீட்டுத் திட்டங்கள் -2026/2028;

(viii) அரசதுறை பதவியணி பற்றிய தகவல்கள்-2025;

(ix) 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 52 ஆம் பிரிவு உடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்;

(x) (அத்தியாயம் 52) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழான மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பான விதிகள்;

(xi) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4 (1) மற்றும் 14 ஆவது பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்;

(2025 ஒற்றோபர் 15 ஆம் திகதிய 2458/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)

(xii) 2025 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பமாகும் மற்றும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நிறைவடைகின்ற நிதியாண்டிற்கான நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவீனத் தலைப்பு 243 – நிகழ்ச்சித்திட்டம் – 01, 2025 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்புத் தொகை;

(xiii) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமூலம்;

(xiv) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்;

(2025 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 2459/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)

(xv) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பிலான கட்டளை;

(xvi) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பிலான தீர்மானம்

(2025 ஒற்றோபர் 09 ஆம் திகதிய 2457/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை);

(xvii) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பிலான தீர்மானம்

(2025 நவெம்பர் 07 ஆம் திகதிய 2461/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை);

(xviii) 2019 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி தொடர்பிலான ஒழுங்குவிதி; மற்றும்

(xix) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழான கட்டளை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

வெல்லவ, ஹந்தமாகம எனும் முகவரியில் வதியும் திரு. விஜேசிங்க கே. வீரசிங்கவினது 2025.07.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. பல்கலைக்கழகங்கள் (திருத்தம்):** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2026 சனவரி 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று .

**6. *சிறப்புரிமை* (இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ அவர்கள் 2025 நவம்பர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. *சிறப்புரிமை* (இல.2):** கௌரவ கிங்ஸ் நெல்சன் அனுவதிக்க கௌரவ கயந்த கருணாதிலக்க பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா அவர்கள் 2025 நவம்பர் 21 ஆம் திகதிய கடிதம் மூலம் கௌரவ சபாநாயகருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயம், கௌரவ சபாநாயகர் அவர்களினால் 2025 டிசம்பர் 01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட பத்தொன்பதாம் நாள்)**: குழுநிலையில் மேலும் பரிசீலிக்கப்பட்டது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

தலைப்பு 116

நிகழ்ச்சித்திட்டம் 1 (மீண்டுவரும் செலவினம்)

"நிகழ்ச்சித்திட்டம் 10/- ரூபாவினால் குறைக்கப்படுமாக" என கௌரவ கயந்த கருணாதிலக்க பிரேரித்தார்.

(மு.ப. 10.39 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 12.25 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.40 மணிக்கு கௌரவ கிங்ஸ் நெல்சன் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 2.42 மணிக்கு கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.56 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 6.23 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"விவாதம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விவாதம் 2025 டிசெம்பர் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

**9. பாராளுமன்ற நிலையியற் கட்டளை 22(4) ஏற்பாடுகளினால் தடைபெறாமல், சபையின் விசேட அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பிப்பு:** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2025 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டினை சமர்ப்பித்து, இக்குறைநிரப்பு மதிப்பீடு அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென கட்டளையாயிற்று.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஒத்திவைப்பு:** "இப் பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

அவ்வேளை நேரம் பி.ப. 6.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 7.08 மணிக்கு சபாநாயகர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் நவம்பர் 13 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க 2025 டிசெம்பர் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.